கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திருமதி.கா. ரங்கநாயகி
மாண்புமிகு மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் -641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர்
மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

மாண்புமிகு பாராளுமன்ற
உறுப்பினர்கள்,
(கோயம்புத்தூர் மற்றும்
பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

மாண்புமிகு சட்டமன்ற
உறுப்பினர்கள்,
(கவுண்டம்பாளையம்,
கோயம்புத்தூர் வடக்கு,
தொண்டாமுத்தூர்,
கோயம்புத்தூர் தெற்கு,
சிங்காநல்லூர் மற்றும்
கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்).

திருவள்ளுவர் ஆண்டு 2056 / விசுவாவசு வருடம் / ஐப்பசி 28

ந.க.எண் : 5923/2025 / எம்சி. 8 நாள் 14.11.2025

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - தகவல் தெரிவித்தல் - தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் மாமன்ற சாதாரணக் கூட்டம், திருவள்ளுவர் ஆண்டு **2056 / விசுவாவசு வருடம் / கார்த்திகை மாதம் 05 ஆம் நாள் (21.11.2025) வெள்ளிக் கிழமை காலை 10.30 மணிக்கு** மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள விக்டோரியா ஹால் கூட்ட அரங்கில் மாண்புமிகு மேயர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு - கூட்டப்பொருள்கள்

(ஒப்பம்) கா. ரங்கநாயகி
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

நகல் :

துணை ஆணையாளர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் , கோயம்புத்தூர் மாநகராட்சி

கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திருமதி.கா. ரங்கநாயகி
மாண்புமிகு மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் -641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர்
மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவு தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

மாண்புமிகு பாராளுமன்ற
உறுப்பினர்கள்,
(கோயம்புத்தூர் மற்றும்
பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

மாண்புமிகு சட்டமன்ற
உறுப்பினர்கள்,
(கவுண்டம்பாளையம்,
கோயம்புத்தூர் வடக்கு,
தொண்டாமுத்தூர்,
கோயம்புத்தூர் தெற்கு,
சிங்காநல்லூர் மற்றும்
கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்).

திருவள்ளுவர் ஆண்டு 2056 / விசுவாவசு வருடம் / கார்த்திகை 03

ந.க.எண் : 5923/2025 / எம்சி. 8 நாள் 19.11.2025

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - மாற்றியமைக்கப்பட்டது - தகவல் தெரிவித்தல் - தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 21.11.2025 வெள்ளிக் கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற இருந்த மாமன்ற சாதாரணக் கூட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 25.11.2025 அன்று செம்மொழி பூங்கா திறப்புவிழா நிகழ்ச்சிக்கு வருகை தருவதை முன்னிட்டு, செம்மொழி பூங்கா தொடர்பான பணிகளை நிறைவு செய்ய வேண்டியுள்ளதால், அனைத்து அலுவலர்களும் மேற்காண் பணிகளில் ஈடுபட்டுள்ள காரணங்களினால் மாற்றியமைக்கப்பட்டு, **28.11.2025 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு** நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

(ஒப்பம்) ரங்கநாயகி

மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

நகல் :

துணை ஆணையாளர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் , கோயம்புத்தூர் மாநகராட்சி

மாமன்ற சாதாரணக் கூட்டம் -28.11.2025

நிகழ்ச்சி நிரல்

பொருளடக்கம்		பக்கம் எண்
	அ) தமிழ்த்தாய் வாழ்த்து	
	ஆ) திருக்குறள் வாசித்தல் இ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி	1
வ.எண்	ஈ) **தீர்மானத்திற்குரிய பொருள்கள்**	
1	பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - **வார்டு எண்** 76, 77, 78, 79 **க்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்கி பராமரித்தல் பணி** – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	2
2	பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண்-76,77,78 மற்றும் 79-க்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை இயக்கி பராமரித்தல் பணி -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	3
3	பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - கழிவுநீர் மின் மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு ஆட்களை வைத்து இயக்குதல் மற்றும் பராமரித்தல் 6 பணிகள் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	3
4	பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - துடியலூர், வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி ஆகிய பகுதிகளில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை ஒப்பந்த அடிப்படையில் ஒருவருட காலத்திற்கு ஆட்களை வைத்து குடிநீர் விநியோகம் செய்தல் 4 பணிகள் -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	4
5	பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - துடியலூர், வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி ஆகிய பகுதிகளில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை ஒப்பந்த அடிப்படையில் ஒருவருட காலத்திற்கு ஆட்களை வைத்து குடிநீர் விநியோகம் செய்தல் – 2 பணிகள் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	5
6	பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - துடியலூர், வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி ஆகிய பகுதிகளில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை ஒப்பந்த அடிப்படையில் ஒருவருட காலத்திற்கு ஆட்களை வைத்து குடிநீர் விநியோகம் செய்தல் 2 பணிகள் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	5
7	பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - துடியலூர், வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி ஆகிய பகுதிகளில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை ஒப்பந்த அடிப்படையில் ஒருவருட காலத்திற்கு ஆட்களை வைத்து குடிநீர் விநியோகம் செய்தல் 3 பணிகள் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	5
8	பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - துடியலூர், வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி ஆகிய பகுதிகளில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை ஒப்பந்த அடிப்படையில் ஒருவருட காலத்திற்கு ஆட்களை வைத்து குடிநீர் விநியோகம் செய்தல் 4 பணிகள் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	6
9	பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - துடியலூர், வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி ஆகிய பகுதிகளில் குடிநீர் கசிவுகளை ஒருவருட காலத்திற்கு சரி செய்தல் 11 பணிகள் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	6
10	பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்தல் – 10 பணிகள் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	7

11	பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் -துடியலூர், வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி ஆகிய பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்தல் – 9 பணிகள் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	8
12	பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம், வார்டு எண் 4,13-க்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் இதர வகை கட்டிடங்களுக்கு பில்லூர் 3-ம் திட்ட குடிநீர் வளர்மதி நகர் (MBR) மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் குடிநீரின் அளவு மற்றும் IoT தொழில் நுட்பத்தில் தானியங்கி திறப்பான்கள், அளவுமாணி கருவிகள் பொருத்தி சீரான குடிநீர் விநியோகம் செய்தல்- மதிப்பீடு ரூ.49.90 இலட்சம் மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	9
13	பொறியியல் பிரிவு – கிழக்கு மண்டலம் - வார்டு எண்.60க்குட்பட்ட சிங்காநல்லூர், வரதராஜபுரம் JJ கல்யாண மஹால் அபிவிருத்திப் பணிகள் பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டதற்கு பதிலாக மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல நிதியில் இருந்து மேற்கொள்ளுதல் – மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக	9
14	பொது சுகாதாரம் – கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு மண்டல வார்டு பகுதிகளில் பணிபுரியும் நிரந்தர தூய்மைப்பணியாளர்களுக்கு 2025-2026-ஆம் ஆண்டிற்கு பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்குதல்– மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக.	10
15	பொது சுகாதாரம் – வடக்கு மற்றும் மத்திய மண்டல வார்டு பகுதிகளில் பணிபுரியும் நிரந்தர தூய்மைப்பணியாளர்களுக்கு 2025-2026-ஆம் ஆண்டிற்கு பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்குதல்– மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக.	12
16	பொது சுகாதாரம் – அனைத்து மண்டலங்களில் பணிபுரியும் நிரந்தர தூய்மைப்பணியாளர்களுக்கு 2025-2026-ஆம் ஆண்டுக்கான சீருடைகள் வாங்கி வழங்குதல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக.	13
17	பொது சுகாதாரம் – மேற்கு மண்டலத்தில் 8 எண்ணிக்கையிலான UPHC நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு துப்புரவு பணியாளர்கள், ஆயா மற்றும் காவலாளிகள் வெளிக்கொணர்வு முகமை மூலம் எட்டு மாதங்களுக்கு (01.02.2025 முதல் 30.09.2025 வரை) பணிகள் மேற்கொண்டு வருவது – பணி உத்தரவு 30.09.2025 உடன் முடிவடைவதால், மேற்படி பணிகளை மேற்கொள்ள கால நீட்டிப்பு வழங்குதல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக.	15
18	பொது சுகாதாரம் – கிழக்கு மண்டலத்தில் 6 எண்ணிக்கையிலான UPHC நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு துப்புரவு பணியாளர்கள், ஆயா மற்றும் காவலாளிகள் வெளிக்கொணர்வு முகமை மூலம் எட்டு மாதங்களுக்கு (01.02.2025 முதல் 30.09.2025 வரை) பணிகள் மேற்கொண்டு வருவது – பணி உத்தரவு 30.09.2025 உடன் முடிவடைவதால், மேற்படி பணிகளை மேற்கொள்ள கால நீட்டிப்பு வழங்குதல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக.	16
19	பொது சுகாதாரம் – மத்தியம் மண்டலத்தில் 6 எண்ணிக்கையிலான UPHC நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு துப்புரவு பணியாளர்கள், ஆயா மற்றும் காவலாளிகள் வெளிக்கொணர்வு முகமை மூலம் எட்டு மாதங்களுக்கு (01.02.2025 முதல் 30.09.2025 வரை) பணிகள் மேற்கொண்டு வருவது – பணி உத்தரவு 30.09.2025 உடன் முடிவடைவதால், மேற்படி பணிகளை மேற்கொள்ள கால நீட்டிப்பு வழங்குதல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக.	18

20	பொது சுகாதாரம் – வடக்கு மண்டலத்தில் 6 எண்ணிக்கையிலான UPHC நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு துப்புரவு பணியாளர்கள், ஆயா மற்றும் காவலாளிகள் வெளிக்கொணர்வு முகமை மூலம் எட்டு மாதங்களுக்கு (01.02.2025 முதல் 30.09.2025 வரை) பணிகள் மேற்கொண்டு வருவது – பணி உத்தரவு 30.09.2025 உடன் முடிவடைவதால், மேற்படி பணிகளை மேற்கொள்ள கால நீட்டிப்பு வழங்குதல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக.	19
21	பொது சுகாதாரம் – தெற்கு மண்டலத்தில் 7 எண்ணிக்கையிலான UPHC நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு துப்புரவு பணியாளர்கள், ஆயா மற்றும் காவலாளிகள் வெளிக்கொணர்வு முகமை மூலம் எட்டு மாதங்களுக்கு (01.02.2025 முதல் 30.09.2025 வரை) பணிகள் மேற்கொண்டு வருவது – பணி உத்தரவு 30.09.2025 உடன் முடிவடைவதால், மேற்படி பணிகளை மேற்கொள்ள கால நீட்டிப்பு வழங்குதல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக.	20
22	பொறியியல் பிரிவு – வடக்கு மற்றும் மேற்கு மண்டலம் - உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் ஸ்மார்ட் லேப் அமைத்தல் பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் – மாமன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக.	22
23	பொறியியல் பிரிவு – தெற்கு மண்டலம் வார்டு எண்.89க்குட்பட்ட சுண்டக்காமுத்தூர் குளம் - நீர் சேமிப்பு கிணறு அமைத்து தண்ணீர் நிரப்பும் பணி மதிப்பீடு ரூ.88.00 இலட்சம் - மாமன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக.	23
24	பொறியியல் பிரிவு – தெற்கு மண்டலம் - வார்டு எண் 92 தெற்கு மண்டல அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள பொது கழிப்பிடம் இடித்து அப்புறப்படுத்தும் பணி – மாமன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக.	23
25	வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - 2025-26 முதல் 2026-27-ம் ஆண்டிற்கான வருடாந்திர குத்தகை இனங்கள் - 16.07.2025 அன்று பொது ஏலம் / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது உயர்ந்த பட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படைப்பது செய்வது – மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக.	23
26	பொதுக்கணக்குப் பிரிவு - முனிசிபல் பத்திரம் வெளியீடு (Municipal Bond Release) செய்தல் – திட்ட நிலைத்தன்மை மானிய நிதி (PSGF) ரூ. 12.40 கோடிக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது – மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் சமர்ப்பித்தல் – தொடர்பாக	26
27	பொறியியல் பிரிவு - பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் மேற்கொள்ளப்படும் 22 பணிகள்- ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	26
28	பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் - 13 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	31
29	பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - 10 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	35
30	பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - 10 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	37
31	பொறியியல் பிரிவு - 3 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	40
32	பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - 5 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	41
33	பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - 66 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	43

34	பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - 8 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	60
35	பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - 22 எண்ணிக்கையில் பயணிகள் நிழற்குடை அமைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	61
36	பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டுதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் - 18 பணிகள் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	63
37	பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு சிறப்புக் கூட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட பணிகள்- மதிப்பீடு தயாரிக்கப்பட்டது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	65
38	பொது கணக்குப் பிரிவு - முனிசிபல் பத்திரங்கள் வெளியீடு செய்தல்- ஆலோசகர்கள் நியமித்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	70
39	பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - 18 எண்ணிக்கையில் பயணிகள் நிழற்குடை அமைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	72
40	பொறியியல் பிரிவு - **தெற்கு மண்டலம் வார்டு எண் 78 க்கு உட்பட்ட வடக்கு ஹவுசிங் யூனிட் தென்வடல் வீதியில் உள்ள ஒருங்கிணைத்த குழந்தைகள் நல மையம் கட்டுதல்** மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	74
41	பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டுதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் - 6 பணிகள் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	75
42	பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு சிறப்புக் கூட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட பணிகள்- மதிப்பீடு தயாரிக்கப்பட்டது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	76
43	பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - 31 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	82
44	பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - 21 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	88
45	பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - 43 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	94
46	பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு சிறப்புக் கூட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட பணிகள்- மதிப்பீடு தயாரிக்கப்பட்டது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	105
47	பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - 3 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	110
48	பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - 25 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	111
49	பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு சிறப்புக் கூட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட பணிகள்- மதிப்பீடு தயாரிக்கப்பட்டது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	115
50	பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - 11 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	119
51	பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - 5 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	120
52	பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - 5 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	121
53	பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் - 10 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	122
54	பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் - 11 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	123
55	பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எணட 82 க்ககுட்பட்ட வின்சென்ட் சாலை வாலாங்குளம் அருகில் மழைநீர் கடிகால் கட்டுதல் பண- - மதிப்பீடு ரூ.63.00 இலட்சம் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	124
56	பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு சிறப்புக் கூட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட பணிகள்- மதிப்பீடு தயாரிக்கப்பட்டது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	125

வ.எண்	தீர்மானத்திற்குரிய பொருள்கள்	பக்கம் எண்
57	பொறியியல் பிரிவு – தெற்கு மண்டலம் -வார்டு எண் 89க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகளைஇயக்கி பராமரித்தல் பணி- காலநீட்டிப்பு செய்தல்- மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக	129
58	பொறியியல் பிரிவு – தெற்கு மண்டலம் -வார்டு எண் 99க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகளைஇயக்கி பராமரித்தல் பணி- காலநீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக	129
59	பொறியியல் பிரிவு – தெற்கு மண்டலம் -வார்டு எண் 85க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகளைஇயக்கி பராமரித்தல் பணி- காலநீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக	130
60	பொறியியல் பிரிவு – தெற்கு மண்டலம் -வார்டு எண் 94க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகளைஇயக்கி பராமரித்தல் பணி- காலநீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக	131
61	பொறியியல் பிரிவு -கிழக்கு மண்டலம்- 5 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	131
62	பொறியியல் பிரிவு –வடக்கு மற்றும் மேற்கு மண்டலம்- 21 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் –ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	132
63	பொறியியல் பிரிவு –வடக்கு மற்றும் மேற்கு மண்டலம்- 5 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் –ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	137
64	பொறியியல் பிரிவு –வடக்கு மண்டலம்- வார்டு28க்குட்பட்ட சோபா நகர் 2வது பிரதான சாலையில் பதிய பாலம் கட்டுதல்-ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	138
65	பொறியியல் பிரிவு –கிழக்கு மண்டலம்- 3 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் –ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	139
66	கிழக்கு மண்டலம் வார்டு எண் 51க்குட்பட்ட பகுதியில் உள்ள மாரியம்மன் கோவில் வீதி பிரதான சாலை பகுதியில் பாதாள சாக்கடை இணைப்பு வழங்குதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	140
67	பொறியியல் பிரிவு –கிழக்கு மண்டலம்- 8 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் –- மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக	142
68	வருவாய் பிரிவு -கோயம்புத்தூர் மாநகராட்சி - செம்மொழி பூங்கா – பொது மக்கள் பார்வையிட நுழைவு கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது – கட்டண மறு நிர்ணயம் – மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக	143
69	வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - 2025-26 முதல் 2026-27-ம் ஆண்டிற்கான வருடாந்திர குத்தகை இனங்கள் - 16.07.2025 அன்று பொது ஏலம் / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது உயர்ந்த பட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படைப்பது செய்வது மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக	146

70	பொது சுகாதாரப் பிரிவு - மத்தியம் மண்டலம் வார்டு பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா நோய் தடுப்பு பணிகளுக்கு தேவையான டெக்னிகல் மாலத்தியான் கிரேடு 95% (Technical Malathion) இரசாயன மருந்தினை வாங்கி வழங்கவும் மற்றும் விநியோக உத்தரவு அனுமதி வழங்குதல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.	146
71	பொது சுகாதாரப் பிரிவு – கிழக்கு மண்டலம் வார்டு பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா நோய் தடுப்பு பணிகளுக்கு தேவையான டெக்னிகல் மாலத்தியான் கிரேடு 95% (Technical Malathion) இரசாயன மருந்தினை வாங்கி வழங்கவும் மற்றும் விநியோக உத்தரவு அனுமதி வழங்குதல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.	148
72	பொது சுகாதாரப் பிரிவு – வடக்கு மண்டலம் வார்டு பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா நோய் தடுப்பு பணிகளுக்கு தேவையான டெக்னிகல் மாலத்தியான் கிரேடு 95% (Technical Malathion) இரசாயன மருந்தினை வாங்கி வழங்கவும் மற்றும் விநியோக உத்தரவு அனுமதி வழங்குதல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.	150
73	பொது சுகாதாரப் பிரிவு – தெற்கு மண்டலம் வார்டு பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா நோய் தடுப்பு பணிகளுக்கு தேவையான டெக்னிகல் மாலத்தியான் கிரேடு 95% (Technical Malathion) இரசாயன மருந்தினை வாங்கி வழங்கவும் மற்றும் விநியோக உத்தரவு அனுமதி வழங்குதல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.	151
74	பொது சுகாதாரப் பிரிவு – மேற்கு மண்டலம் வார்டு பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா நோய் தடுப்பு பணிகளுக்கு தேவையான டெக்னிகல் மாலத்தியான் கிரேடு 95% (Technical Malathion) இரசாயன மருந்தினை வாங்கி வழங்கவும் மற்றும் விநியோக உத்தரவு அனுமதி வழங்குதல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.	153
75	பொது சுகாதாரப்பிரிவு – வடக்கு மண்டல வார்டு பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய்களை பரப்பும் கொசு புழுக்கள் மற்றும் முதிர் கொசுக்களை அழிக்கப்பயன்படும் பைரத்திரம் (Pyrethrum Extract-2%) கிருமி நாசினி மருந்து வாங்கி வழங்கவும் மற்றும் விநியோக உத்தரவு அனுமதி வழங்குதல் –மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.	155
76	பொது சுகாதாரப்பிரிவு – மேற்கு மண்டல வார்டு பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய்களை பரப்பும் கொசு புழுக்கள் மற்றும் முதிர் கொசுக்களை அழிக்கப் பயன்படும் பைரத்திரம் (Pyrethrum Extract-2%) கிருமி நாசினி மருந்து வாங்கி வழங்கவும் மற்றும் விநியோக உத்தரவு அனுமதி வழங்குதல் –மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.	156

77	பொது சுகாதாரப்பிரிவு – தெற்கு மண்டல வார்டு பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய்களை பரப்பும் கொசு புழுக்கள் மற்றும் முதிர் கொசுக்களை அழிக்கப்பயன்படும் பைரத்திரம் (Pyrethrum Extract-2%) கிருமி நாசினி மருந்து வாங்கி வழங்கவும் மற்றும் விநியோக உத்தரவு அனுமதி வழங்குதல் –மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.	157
78	பொது சுகாதாரப்பிரிவு – கிழக்கு மண்டல வார்டு பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய்களை பரப்பும் கொசு புழுக்கள் மற்றும் முதிர் கொசுக்களை அழிக்கப்பயன்படும் பைரத்திரம் (Pyrethrum Extract-2%) கிருமி நாசினி மருந்து வாங்கி வழங்கவும் மற்றும் விநியோக உத்தரவு அனுமதி வழங்குதல் –மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.	158
79	பொது சுகாதாரப்பிரிவு – மத்திய வடக்கு மண்டல வார்டு பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய்களை பரப்பும் கொசு புழுக்கள் மற்றும் முதிர் கொசுக்களை அழிக்கப்பயன்படும் பைரத்திரம் (Pyrethrum Extract-2%) கிருமி நாசினி மருந்து வாங்கி வழங்கவும் மற்றும் விநியோக உத்தரவு அனுமதி வழங்குதல் –மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.	159
80	பொது சுகாதாரப்பிரிவு – வடக்கு மண்டல வார்டு பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய்களை பரப்பும் கொசு புழுக்கள் மற்றும் முதிர் கொசுக்களை அழிக்கப்பயன்படும் அபேட் (TEMEPHOS 50% EC) கிருமி நாசினி மருந்து வாங்கி வழங்கவும் மற்றும் விநியோக உத்தரவு அனுமதி வழங்குதல் –மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.	160
81	பொது சுகாதாரப்பிரிவு – மேற்கு மண்டல வார்டு பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய்களை பரப்பும் கொசு புழுக்கள் மற்றும் முதிர் கொசுக்களை அழிக்கப்பயன்படும் அபேட் (TEMEPHOS 50% EC) கிருமி நாசினி மருந்து வாங்கி வழங்கவும் மற்றும் விநியோக உத்தரவு அனுமதி வழங்குதல் –மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.	161
82	பொது சுகாதாரப்பிரிவு – தெற்கு மண்டல வார்டு பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய்களை பரப்பும் கொசு புழுக்கள் மற்றும் முதிர் கொசுக்களை அழிக்கப்பயன்படும் அபேட் (TEMEPHOS 50% EC) கிருமி நாசினி மருந்து வாங்கி வழங்கவும் மற்றும் விநியோக உத்தரவு அனுமதி வழங்குதல் –மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.	162
83	பொது சுகாதாரப்பிரிவு – கிழக்கு மண்டல வார்டு பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய்களை பரப்பும் கொசு புழுக்கள் மற்றும் முதிர் கொசுக்களை அழிக்கப்பயன்படும் அபேட் (TEMEPHOS 50% EC) கிருமி நாசினி மருந்து வாங்கி வழங்கவும் மற்றும் விநியோக உத்தரவு அனுமதி வழங்குதல் –மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.	163

84	பொது சுகாதாரப்பிரிவு – மத்திய மண்டல வார்டு பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய்களை பரப்பும் கொசு புழுக்கள் மற்றும் முதிர் கொசுக்களை அழிக்கப்பயன்படும் அபேட் (TEMEPHOS 50% EC) கிருமி நாசினி மருந்து வாங்கி வழங்கவும் மற்றும் விநியோக உத்தரவு அனுமதி வழங்குதல் –மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.	164
85	பொது சுகாதாரப்பிரிவு –வடக்கு மண்டலம் வார்டு 19ல் உள்ள மணியகாரம்பாளையம் பகுதியில் 03/07/2025 தேதியன்று மாண்புமிகு.முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ள மணியகாரம்பாளையம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு முற்றிலும் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் 4 செவிலியர், 1 மருந்தாளுநர் மற்றும் 1 ஆய்வகநுட்புநர் காலிப்பணியிடங்களை மாநகராட்சியின் மூலம் பணியமர்த்துதல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.	165
86	பொது சுகாதாரப்பிரிவு – பீளமேடு, உப்பிலிபாளையம் மற்றும் போத்தனூர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்பட்டு வரும் 3 நகர்ப்புற பொது சுகாதார ஆய்வகங்களுக்கு தலா ஒரு நுண்ணுயிரியலாளர், ஆய்வகநுட்புநர் மற்றும் பல்நோக்கு மருத்துவ பணியாளர் வீதம் ஒன்பது பணியாளர்களை மாநகராட்சியின் கீழ் முற்றிலும் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திக்கொள்ள மன்ற அனுமதி பெறப்பட்டது. இந்த மன்ற அனுமதி நவம்பர் மாதத்துடன் முடிவடைவதால் மீண்டும் நான்கு மாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டுவது – தொடர்பாக.	166
87	பொது சுகாதாரம் – அனைத்து மண்டல வார்டு பகுதிகளுக்கு மலேரியா - வைரஸ் போன்ற கொசுப்புழுக்களை அழிக்க பேசில்லஸ் துரஞ்சியன்சிஸ் (BT 5%) மருந்துகள் வாங்கவும் அதற்கான விநியோக உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள்வைப்பது - தொடர்பாக.	167
88	மாமன்றப்பிரிவு- மாற்றுத் திறனாளிகளுக்கான நியமன உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டது- பதவியேற்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது- மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்பித்தல்-தொடர்பாக	169

ஆ)

திருக்குறள்

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்

குறள் - 619

விளக்கம்

வழிகாட்டிகளின் துணையும், அனுபவமும் வெற்றிபெறப் பெரிதாக உதவாத நேரங்களில்கூட, விடா முயற்சியும், அயராத உழைப்பும் அவற்றிற்கு உரிய பலன்களை உறுதியாகத் தவறாது அளிக்கும்.

திருவள்ளுவர்.

இ) **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவ்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

பொருள் எண் 1

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம்- வார்டு எண் 76,77,78,79 க்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்கி பராமரித்தல் பணிக்கு மாமன்றத் தீர்மான எண் 370 நாள் 26 .07 .2024 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு 03 .09 .2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்கப்பட்டு கீழ்கண்டவாறு பணிகள் நடைபெற்று வருகிறது.

வ எண்	பணியின் பெயர்	மதிப்பிடுத் தொகை ரூ லச்சத்தில்	பணி உத்தரவு வழங்கப்பட்ட நாள்	தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தத்தார்	ஒப்பந்த காலம்	ஒப்பந்த காலம் முடிவுற்ற நாள்
1	தெற்கு மண்டலம் வார்டு எண் 76 க்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்கி பராமரித்தல் பணி நக எண் 4939/2024/MD4	13.00	24.10.2024	திரு. இளங்கோ	12	23.10.2024
2	தெற்கு மண்டலம் வார்டு எண் 77 க்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்கி பராமரித்தல் பணி நக எண் 4940/2024/MD4	13.00	24.10.2024	தி/ள். ஏபிஆர் கான்ஸ்ட்ரக்சன்ஸ்	12	23.10.2024
3	தெற்கு மண்டலம் வார்டு எண் 78 க்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்கி பராமரித்தல் பணி நக எண் 4941/2024/MD4	11.70	24.10.2024	திரு. எஸ்.சுதாகர்	12	23.10.2024
4	தெற்கு மண்டலம் வார்டு எண் 79 க்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்கி பராமரித்தல் பணி நக எண் 4756/2024/MD4	6.70	24.10.2024	தி/ள். ஜெயலட்சுமி பில்டர்ஸ்	12	23.10.2024
	மொத்தம்	44.40				

மேற்கண்ட பணியின் ஒப்பந்த காலம் முடிவடையும் நிலையில் உள்ளதால் புதிய பராமரிப்பு பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்தரவு வழங்கும் வரை கூடுதலாக 3 மாதங்களுக்கு (24.10.2025 முதல் 23.01.2026 வரை) கால நீட்டிப்பு செய்து பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரர்கள், ஏற்கனவே கொடுத்துள்ள ஒப்பந்த விலைப்புள்ளி விகிதத்திற்க்கே பணியினை மேற்கொள்ள கூடுதல் 3 மாதங்களுக்கான ஏற்படும் செலவினத் வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண் 4339 /2024 / MD4

பொருள் எண் 2

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண்-76,77,78 மற்றும் 79-க்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை இயக்கி பராமரித்தல் பணி – (அரசாணை நிலை எண் 158 நாள் 02.11.2022 – மாநகராட்சி பராமரிப்பு பணிகள் விதி எண் 2பி ன் படி) மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம்

வ.எண்	கோப்பு எண்	பணியின் பெயர்	மதிப்பீடு தொகை (இலட்சத்தில்)
1	5620/2025/MD4	வார்டு எண் 76- க்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்கி பராமரித்தல் பணி.	13.50
2	5621/2025/MD4	வார்டு எண் 77- க்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்கி பராமரித்தல் பணி.	13.00
3	5622/2025/MD4	வார்டு எண் 78- க்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்கி பராமரித்தல் பணி.	12.00
4	5623/2025/MD4	வார்டு எண் 79- க்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்கி பராமரித்தல் பணி.	7.00
		மொத்தம்	**45.50**

மேற்கண்ட பட்டியலில் உள்ள பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம் ந.க. எண் : 5622/2025/எம்டி4 (தெ)

பொருள் எண் 3

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட கழிவுநீர் மின் மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு ஆட்களை வைத்து இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	வார்டு எண்	ந.க. எண்	வேலையின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சம்)
1.	3	5696/2025/ MD2	வார்டு எண் 3க்குட்பட்ட குறிஞ்சி நகர் பிரதான சாலை பகுதியில் கழிவுநீர் மின் மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	2.50
2.	4	5697/2025/ MD2	வார்டு எண் 04 க்குட்பட்ட ஆதிதிராவிடர் பகுதியில் கழிவுநீர் மின் மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	3.90
3.	13	5698/2025/ MD2	வார்டு எண் 13க்குட்பட்ட விஜயா நகர் பகுதியில் கழிவுநீர் மின் மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	2.50
4.	19	5699/2025/ MD2	வார்டு எண் 19க்குட்பட்ட பாலமுருகன் நகர் பகுதியில் கழிவுநீர் மின் மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு ஆட்களை வைத்து இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	1.72
5.	29	5700/2025/ MD2	வார்டு எண் 29-க்குட்பட்ட அப்பநாயுடு லே அவுட் பகுதியில் கழிவுநீர் மின் மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு ஆட்களை வைத்து இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	4.10
6.	30	5701/2025/ MD2	வார்டு எண் 30-க்குட்பட்ட நல்லதண்ணீர் தோட்டம் பகுதியில் கழிவுநீர் உந்து நிலையத்தின் மின் மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	4.10
			மொத்தம்	**18.82**

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 6 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண். 5696/2025/MD2

பொருள் எண் 4

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட துடியலூர், வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி ஆகிய பகுதிகளில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை ஒப்பந்த அடிப்படையில் ஒருவருட காலத்திற்கு ஆட்களை வைத்து குடிநீர் விநியோகம் செய்தல் பணிகள் மேற்கொள்ள அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்	வார்டு எண்	ந.க. எண்	வேலையின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சம்)
1.	11	5689/2025/MD2	வார்டு எண் 11 வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் – அபிராமி நகர் மற்றும் சக்தி நகர் பகுதிகளில் 2 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் – இயக்குதல் – தனியார் பராமரிப்பு பணி	15.50
2.	12	5690/2025/MD2	வார்டு எண் 12 வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் – சின்னவேடம்பட்டி பகுதிகளில் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் – இயக்குதல் – தனியார் பராமரிப்பு பணி	7.90
4.	21	5691/2025/MD2	வார்டு எண் 21 வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் – பாலாஜி நகர், விநாயகபுரம் மற்றும் சிவானந்தபுரம் பகுதிகளில் 3 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் – இயக்குதல் – தனியார் பராமரிப்பு பணி	23.20
			மொத்தம்	**46.60**

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 4 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண்.5689/2025/MD2

பொருள் எண் 5

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட துடியலூர், வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி ஆகிய பகுதிகளில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை ஒப்பந்த அடிப்படையில் ஒருவருட காலத்திற்கு ஆட்களை வைத்து குடிநீர் விநியோகம் செய்தல் பணிகள் மேற்கொள்ள அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்	வார்டு எண்	ந.க. எண்	வேலையின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சம்)
1.	4	5694/2025/ MD2	வார்டு எண் 4 வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் – துரைசாமி நகர், கல்பனா நகர், நமச்சிவாய நகர் மற்றும் விஸ்வாசபுரம் பகுதிகளில் 4 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் – இயக்குதல் – தனியார் பராமரிப்பு பணி	31.00
2.	15	5695/2025/ MD2	வார்டு எண் 15 வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் – சுப்பிரமணியம்பாளையம் OHT எஸ்.எம்.பாளையம் கீழ்நிலைத்தொட்டி நகர் காந்தி நகர், ஸ்ரீனிவாசா நகர் மற்றும் திருப்பதி நகர் பகுதிகளில் 5 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் – இயக்குதல் – தனியார் பராமரிப்பு பணி	42.90
			மொத்தம்	**73.90**

மேற்கண்ட பட்டியலில் உள்ள 2 பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தாள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண்.5694/2025/MD2

பொருள் எண் 6

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட துடியலூர், வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி ஆகிய பகுதிகளில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை ஒப்பந்த அடிப்படையில் ஒருவருட காலத்திற்கு ஆட்களை வைத்து குடிநீர் விநியோகம் செய்தல் பணிகள் மேற்கொள்ள அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்	வார்டு எண்	ந.க. எண்	வேலையின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சம்)
1.	13	5692/2025/ MD2	வார்டு எண் 13 வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் – உருமாண்டாம்பாளையம், நஞ்சேகவுண்டன்புதூர், உடையாம்பாளையம் சுப்பநாயக்கன்புதூர் ஸ்ரீனிவாசா நகர் மற்றும் ரங்கா மெஜஸ்டிக் பகுதிகளில் 6 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் – இயக்குதல் – தனியார் பராமரிப்பு பணி	47.00
2.	14	5693/2025/ MD2	வார்டு எண் 14 வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் – வி.சி.எஸ் நகர், வி.கே.எல் நகர் அமர்ஜோதி நகர், சாய்நகர் மற்றும் தில்லை நகர் பகுதிகளில் 5 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் – இயக்குதல் – தனியார் பராமரிப்பு பணி	39.10
			மொத்தம்	**86.10**

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 2 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண்.5692/2025/MD2

பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட துடியலூர், வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி ஆகிய பகுதிகளில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை ஒப்பந்த அடிப்படையில் ஒருவருட காலத்திற்கு ஆட்களை வைத்து குடிநீர் விநியோகம் செய்தல் பணிகள் மேற்கொள்ள அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்	வார்டு எண்	ந.க. எண்	வேலையின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சம்)
1.	2	5686/2025/ MD2	வார்டு எண் 2 வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் – வெள்ளக்கிணறு, வெள்ளக்கிணறு பேஸ்-1 , வெள்ளக்கிணறு பேஸ்-2 மற்றும் வட்டமலைபாளையம் மற்றும் பெரியசாமிநகர் லே அவுட் பகுதிகளில் 5 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் – இயக்குதல் – தனியார் பராமரிப்பு பணி	43.10
2.	3	5687/2025/ MD2	வார்டு எண்3 வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் – சக்தி நகர், ரமணீஸ் மயூரி அக்கம்மாள் கார்டன் மற்றும் அஞ்சுகம் நகர் 4 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் – இயக்குதல் – தனியார் பராமரிப்பு பணி	35.10
3.	10	5688/2025/ MD2	வார்டு எண் 10 வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் – சரவணம்பட்டி மற்றும் மார்வெல் பாரம்பரியம் பகுதிகளில் 2 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் – இயக்குதல் – தனியார் பராமரிப்பு பணி	15.50
			மொத்தம்	**93.70**

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 3 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண்.5686/2025/MD2

பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட துடியலூர், வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி ஆகிய பகுதிகளில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை ஒப்பந்த அடிப்படையில் ஒருவருட காலத்திற்கு ஆட்களை வைத்து குடிநீர் விநியோகம் செய்தல் பணிகள் மேற்கொள்ள அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்	வார்டு எண்	ந.க. எண்	வேலையின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சம்)
1.	1	5682/2025/MD2	வார்டு எண் 1 வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் – வளர்மதி நகர் மற்றும் அப்பநாயக்கன்பாளையம் 2 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் – இயக்குதல் – தனியார் பராமரிப்பு பணி	30.70
2.	1	5683/2025/MD2	வார்டு எண் 1 வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் – SMT நகர், பேரின்ப நகர் மற்றும் துடியலூர் 3 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் – இயக்குதல் – தனியார் பராமரிப்பு பணி	34.60
3.	1	5684/2025/MD2	வடக்கு மண்டலத்திற்குட்பட்ட துடியலூர் குடிநீர் பிரிவு அலுவலகத்திற்கு பிளீச்சிங் பவுடர் வழங்குதல்	5.00
4.	1	5685/2025/MD2	வடக்கு மண்டலம் வார்டு எண் 1–க்குட்பட்ட வளர்மதி நகர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிக்கு கேஸ் குளோரின் வழங்குதல்	8.20
			மொத்தம்	**78.50**

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 4 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண்.5682/2025/MD2

பொருள் எண் 9

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட துடியலூர், வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி ஆகிய பகுதிகளில் குடிநீர் கசிவுகளை ஒருவருட காலத்திற்கு சரி செய்தல் பணிகளை மேற்கொள்ள கீழ் கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	வார்டு எண்	ந.க. எண்	வேலையின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சம்)
1.	1	5712/2025/MD2	வார்டு எண் 1–ல் உள்ள பகுதிகளில் குடிநீர் குழாயில் ஏற்படும் கசிவுகளை சரி செய்தல் பணி	10.20
2.	2	5713/2025/MD2	வார்டு எண் 2–ல் உள்ள பகுதிகளில் குடிநீர் குழாயில் ஏற்படும் கசிவுகளை சரி செய்தல் பணி	9.90
3.	3	5714/2025/MD2	வார்டு எண் 3–ல் உள்ள பகுதிகளில் குடிநீர் குழாயில் ஏற்படும் கசிவுகளை சரி செய்தல் பணி	8.00
4.	4	5715/2025/MD2	வார்டு எண் 4–ல் உள்ள பகுதிகளில் குடிநீர் குழாயில் ஏற்படும் கசிவுகளை சரி செய்தல் பணி	6.80
5.	10	5716/2025/MD2	வார்டு எண் 10–ல் உள்ள பகுதிகளில் குடிநீர் குழாயில் ஏற்படும் கசிவுகளை சரி செய்தல் பணி	5.70
6.	11	5717/2025/MD2	வார்டு எண் 11–ல் உள்ள பகுதிகளில் குடிநீர் குழாயில் ஏற்படும் கசிவுகளை சரி செய்தல் பணி	5.50
7.	12	5718/2025/MD2	வார்டு எண் 12–ல் உள்ள பகுதிகளில் குடிநீர் குழாயில் ஏற்படும் கசிவுகளை சரி செய்தல் பணி	7.90

8.	13	5719/2025/MD2	வார்டு எண் 13–ல் உள்ள பகுதிகளில் குடிநீர் குழாயில் ஏற்படும் கசிவுகளை சரி செய்தல் பணி	8.20
9.	14	5720/2025/MD2	வார்டு எண் 14–ல் உள்ள பகுதிகளில் குடிநீர் குழாயில் ஏற்படும் கசிவுகளை சரி செய்தல் பணி	9.00
10.	15	5721/2025/MD2	வார்டு எண் 15–ல் உள்ள பகுதிகளில் குடிநீர் குழாயில் ஏற்படும் கசிவுகளை சரி செய்தல் பணி	9.90
11.	21	5722/2025/MD2	வார்டு எண் 21–ல் உள்ள பகுதிகளில் குடிநீர் குழாயில் ஏற்படும் கசிவுகளை சரி செய்தல் பணி	5.30
			மொத்தம்	**86.04**

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 11 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண். 5712/2024/MD2

பொருள் எண் 10

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்க்குட்பட்ட மாநகராட்சி வார்டு பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்	வார்டு எண்	ந.க. எண்	வேலையின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சம்)
1.	18	5702/2025/MD2	வார்டு எண் 18-க்குட்பட்ட 32 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	11.25
2.	19	5703/2025/MD2	வார்டு எண்19 -க்குட்பட்ட 21 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	7.25
3.	20	5704/2025/MD2	வார்டு எண்20-க்குட்பட்ட 22 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	7.60
4.	25	5705/2025/MD2	வார்டு எண்25 -க்குட்பட்ட 19 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	7.70
5.	26	5706/2025/MD2	வார்டு எண்26-க்குட்பட்ட 33 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	12.25
6.	27	5707/2025/MD2	வார்டு எண்27-க்குட்பட்ட 23 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	9.00
7.	28	5708/2025/MD2	வார்டு எண்28 -க்குட்பட்ட 18 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	7.50
8.	29	5709/2025/MD2	வார்டு எண்29-க்குட்பட்ட 20 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	8.35
9.	30	5710/2025/MD2	வார்டு எண்30-க்குட்பட்ட 20 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	8.70
10.	வடக்கு மண்டலம்	5711/2025/MD2	வடக்கு மண்டலம் அலுவலகத்தில் உள்ள ஜெனரேட்டரை இயக்கி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	5.00
			மொத்தம்	**84.60**

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 10 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண்.5702/2024/MD2

பொருள் எண் 11

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட துடியலூர், வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி ஆகிய பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	வார்டு எண்	ந.க. எண்	வேலையின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சம்)
1.	1	5723/2025/MD2	வார்டு எண் 1 -க்குட்பட்ட 31 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	10.40
2.	2	5724/2025/MD2	வார்டு எண்2 -க்குட்பட்ட 41 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	13.70
3.	3	5725/2025/MD2	வார்டு எண் 3-க்குட்பட்ட 21 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	8.60
4.	4	5726/2025/MD2	வார்டு எண் 4-க்குட்பட்ட 20 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	7.70
5.	10	5727/2024/MD2	வார்டு எண்10 -க்குட்பட்ட 23 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	8.70
6.	11	5728/2025/MD2	வார்டு எண்11 -க்குட்பட்ட 20 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	7.70
7.	15	5729/2025/MD2	வார்டு எண் 15 -க்குட்பட்ட 26 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	11.45
8.	21	5730/2025/MD2	வார்டு எண் 21 -க்குட்பட்ட 10 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்	4.40
9.	04	5731/2025/MD2	வார்டு எண் 04 -க்குட்பட்ட சரவணம்பட்டி பகுதியில் உள்ள பொறியியல் அலுவலகம், சுகாதார அலுவலகம் மற்றும் வருவாய் பிரிவு அலுவலகங்களை ஒரு வருட காலத்திற்கு பராமரித்தல்	8.10
			மொத்தம்	**80.75**

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 09 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண். 5723/2025/MD2

பொருள் எண் 12

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண் 4,13-க்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் இதர வகை கட்டிடங்களுக்கு பில்லூர் 3-ம் திட்ட குடிநீர் வளர்மதி நகர் (MBR) மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் பட்டியலில் உள்ள மேல்நிலை தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்து குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது அதன் விவரம் பின்வருமாறு.

வ. எண்	மேல்நிலை தொட்டியின் பெயர்	கொள்ளளவு ரூ.லட்சத்தில்	வார்டு எண்	HSC
1	சீனிவாச நகர்	3.00	13	769
2	ரெங்கா மெஜஸ்டிக்	2.50	13	410
3	உருமாண்டம்பாளையம்	1.50	13	1,105
4	விஸ்வாசபுரம்	2.80	4	1,500

மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு வருகின்ற குடிநீரின் அளவு (Rate of Inlet Flow), தொட்டியில் உள்ள நீரின் அளவு (Head of Water) மற்றும் தொட்டியில் இருந்து வெளியேறும் நீரின் அளவு (Rate of Outlet Flow) போன்றவற்றை தெரிந்துகொள்ள முடியவில்லை. மேலே குறிப்பிட்ட சில பகுதிகளில் மேல்நிலை தொட்டி நிரம்பி வழிகிறது, குடிநீர் சீராக விநியோகம் செய்ய முடியாத நிலையில் பொதுமக்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் மூலம் புகார்கள் பெறப்பட்டு வருகிறது. அதை நிவர்த்தி செய்யும் பொருட்டு மேல்நிலை தொட்டிகளில் பெறப்படும் குடிநீரின் அளவு மற்றும் IoT தொழில் நுட்பத்தில் தானியங்கி திறப்பான்கள், அளவுமாணி கருவிகள் பொருத்தி சீரான குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.49,90,000க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியின் அத்தியாவசியம் கருதி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.49,90,000க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்:-5846/2025/MD2

பொருள் எண் 13

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி - பொறியியல் பிரிவு - வார்டு எண்.60க்குட்பட்ட சிங்காநல்லூர், வரதராஜபுரம் JJ கல்யாண மஹால் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளவும் - செலவினத் தொகை மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல நிதியிலிருந்து வழங்கவும் அனுமதி கோருதல் - தொடர்பாக

பார்வை- 1. மாநகர மன்ற தீர்மான எண்.422, நாள்31.07.2025
2. மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் அவர்களின் கடித எண்.1685/அ/2023, நாள்.23.09.2025.

கோயம்புத்தூர் மாநகராட்சி பொறியியல் பிரிவு வார்டு எண்.60க்குட்பட்ட சிங்காநல்லூர், வரதராஜபுரம் JJ கல்யாண மஹால் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள ரூ.15.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கடந்த 31.08.2024 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகளை மேற்கொள்ள 20.01.2025 அன்று மாண்புமிகு அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கு மாமன்ற தீர்மான எண்.422, நாள்.31.07.2025ன்படி ஒப்புதல் பெறப்பட்டது.

இந்நிலையில், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்களது கடிதத்தின்படி, மேற்படி பணிகளை மேற்கொள்ள மாவட்ட மாற்று திறனாளிகள் நல நிதியின் கீழ் ரூ.15.75 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள பெறப்பட்ட நிர்வாக அனுமதியினை இரத்து செய்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல நிதியின் மூலம் பணியினை தொடர 22.10.2025 அன்று ஆணையாளர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதற்கு பின்னேற்பு வேண்டியும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க.எண். 6226/2024/எம்.டி.3

பொருள் எண் 14

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் – கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு மண்டல வார்டு பகுதிகளில் பணிபுரியும் நிரந்தர தூய்மைப்பணியாளர்களுக்கு 2025-2026-ஆம் ஆண்டிற்கு பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்க– மன்றத்தின் அனுமதிக்கு பொருள்வைப்பது – தொடர்பாக.

பார்வை :
1. மாநகர நல அலுவலர் அவர்களின் குறிப்பு நாள்.08.08.2025.
2. கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு மண்டல சுகாதார அலுவலர் அவர்களின் அறிக்கை நாள்.09.09.2025
3. பண்டகக்காப்பாளர் அவர்களின் கடிதம் நாள். 15.09.2025.
4. ஆணையர் அவர்களின் உத்தரவு நாள்.07.10.2025.

பார்வை 1-ல் கண்டுள்ள மாநகர நல அலுவலர் அவர்களின் குறிப்பின்படி, பார்வை 2 மற்றும் 3-ல் கண்டுள்ள கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு மண்டல சுகாதார அலுவலர் மற்றும் பண்டகக்காப்பாளர் அவர்களின் அறிக்கைகளில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு மண்டல வார்டு பகுதிகளில் பணிபுரியும் நிரந்தர தூய்மைப்பணியாளர்களுக்கு 2025-2026-ஆம் ஆண்டிற்கு பாதுகாப்பு உபகரணங்களான முககவசம், கையுறை, தொப்பி, மிளிரும் ஜாக்கெட், கம்பூட்ஸ், கட்சூ மற்றும் பேக் (Bag) ஆகிய பாதுகாப்பு உபகரணங்களை வாங்கி வழங்கிட அனைத்து மண்டல சுகாதார அலுவலர் மற்றும் பண்டகக்காப்பாளர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

எனவே, கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு மண்டல சுகாதார அலுவலர் மற்றும் பண்டகக்காப்பாளர் அவர்கள் அளித்துள்ள பட்டியல்படி, கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு மண்டல வார்டு பகுதிகளில் பணிபுரியும் நிரந்தர தூய்மைப்பணியாளர்கள், மற்றும் AMS, UGD, மாநகராட்சி நகர்நல மையங்கள் மற்றும் மருந்தகங்களில் பணிபுரியும் நிரந்தர தூய்மைப்பணியாளர்களில், ஆண் மற்றும் பெண் நிரந்தர தூய்மைப்பணியாளர்கள் மொத்தம் 958 (தெற்கு ஆண்கள்-186 மற்றும் பெண்கள் – 98 மொத்தம் – 284 நபர்கள்), (கிழக்கு ஆண்கள்-191 மற்றும் பெண்கள் – 94 மொத்தம் – 285 நபர்கள்), (மேற்கு ஆண்கள்-246 மற்றும் பெண்கள் – 127 மொத்தம் – 373 நபர்கள்) மற்றும் மாநகராட்சி நகர்நல மையங்களில் பணிபுரியும் ஆண்கள் -07 மற்றும் பெண்கள் -09 மொத்தம் – 16) பணியாளர்களுக்கு முககவசம், கையுறை, தொப்பி, மிளிரும் ஜாக்கெட், கம்பூட்ஸ், கட்சூ மற்றும் பேக் (Bag) போன்ற பாதுகாப்பு உபகரணங்களை பொது சுகாதாரத்தின் அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் அரசு கூட்டுறவு சங்கங்களிடமிருந்து வாங்கலாம்.

- தற்போது 2025- 2026-ஆம் ஆண்டு கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு மண்டலங்களில் பணிபுரியும் நிரந்தர பணியாளர்கள் (AMS மற்றும் UGD பணியாளர்கள் உட்பட) மற்றும் மாநகராட்சி நகர்நல மையங்கள் மற்றும் மருந்தகங்களில் பணிபுரியும் நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை கீழ்கண்டவாறு

மண்டலம்	பாலினம்	கிழக்கு	மேற்கு	தெற்கு	TOT
மண்டலங்களில் பணிபுரியும் நிரந்தர தூய்மைப் பணியாளர்கள்	ஆண்	177	222	162	561
	பெண்	94	127	96	317
மண்டலங்களில் பணிபுரியும் நிரந்தர AMS பணியாளர்கள்	ஆண்	14	13	13	40
	பெண்				
UGD பணியாளர்கள்	ஆண்		11	6	17
	பெண்				
வெள்ளளூர் COMPOST பணியாளர்கள்	ஆண்			5	5
	பெண்			2	2
மாநகராட்சி நகர்நல மையங்கள் மற்றும் மருந்தகங்களில் பணிபுரியும் தூய்மைப்பணியாளர்கள்	ஆண்				07
	பெண்				09
	TOTAL	285	373	284	958

மேலும், 2024-ஆம் ஆண்டில் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கப்பட்டதற்கு கிழக்கு, மண்டலத்திற்கான தொகை ரூ.10,30,139.46/-, மேற்கு மண்டலத்திற்கான தொகை ரூ.12,47,924.58/-, தெற்கு மண்டலத்திற்கான தொகை ரூ.9,41,190.39/- மற்றும் மாநகராட்சி நகர்நல மையங்கள் மற்றும் மருந்தகங்கள் ரூ.57,101.31/- மொத்த தொகை வரிகளுடன் சேர்த்து மொத்த தொகை ரூ.32,76,356/- செலவிடப்பட்டது. தற்போது 2025-2026-ஆம் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.3.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி, அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு மண்டல வார்டு பகுதிகளில் பணிபுரியும் நிரந்தர தூய்மைப்பணியாளர்கள், மற்றும் UGD பணிபுரியும் நிரந்தர தூய்மைப்பணியாளர்கள், ஆண் மற்றும் பெண் நிரந்தர தூய்மைப்பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களை வாங்கி வழங்க உத்தேச செலவினம் ரூ.60,00,000/- ஆகும்.

எனவே, கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு மண்டல வார்டு பகுதிகளில் பணிபுரியும் நிரந்தர தூய்மைப்பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்கவும், இதற்கென ஏற்படும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பார்வை 4-ல் கண்டுள்ளவாறு ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டது. மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.5325/2025/ME4

பொருள் எண் 15

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் – வடக்கு மற்றும் மத்திய மண்டல வார்டு பகுதிகளில் பணிபுரியும் நிரந்தர தூய்மைப்பணியாளர்களுக்கு 2025-2026-ஆம் ஆண்டிற்கு பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்க – மன்றத்தின் அனுமதிக்கு பொருள்வைப்பது – தொடர்பாக.

பார்வை :
1. மாநகர நல அலுவலர் அவர்களின் குறிப்பு நாள்.08.08.2025.
2. வடக்கு மற்றும் மத்திய மண்டல சுகாதார அலுவலர் அவர்களின் அறிக்கை நாள். 09.09.2025
3. பண்டகக்காப்பாளர் அவர்களின் கடிதம் நாள். 15.09.2025.
4. ஆணையர் அவர்களின் உத்தரவு நாள். 07.10.2025.

பார்வை 1-ல் கண்டுள்ள மாநகர நல அலுவலர் அவர்களின் குறிப்பின்படி, பார்வை 2 மற்றும் 3-ல் கண்டுள்ள வடக்கு மற்றும் மத்திய மண்டல சுகாதார அலுவலர் மற்றும் பண்டகக்காப்பாளர் அவர்களின் அறிக்கைகளில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் வடக்கு மற்றும் மத்திய மண்டல வார்டு பகுதிகளில் பணிபுரியும் நிரந்தர தூய்மைப்பணியாளர்களுக்கு 2025-2026-ஆம் ஆண்டிற்கு பாதுகாப்பு உபகரணங்களான முககவசம், கையுறை, தொப்பி, மிளிரும் ஜாக்கெட், கம்பூட்ஸ், கட்சூ மற்றும் பேக் (Bag) ஆகிய பாதுகாப்பு உபகரணங்களை வாங்கி வழங்கிட அனைத்து மண்டல சுகாதார அலுவலர் மற்றும் பண்டகக்காப்பாளர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

எனவே, வடக்கு மற்றும் மத்திய மண்டல சுகாதார அலுவலர் மற்றும் பண்டகக்காப்பாளர் அவர்கள் அளித்துள்ள பட்டியல்படி, வடக்கு மற்றும் மத்திய மண்டல வார்டு பகுதிகளில் பணிபுரியும் நிரந்தர தூய்மைப்பணியாளர்கள், VOC Park மற்றும் UGD பணிபுரியும் நிரந்தர தூய்மைப்பணியாளர்களில், ஆண் மற்றும் பெண் நிரந்தர தூய்மைப்பணியாளர்கள் மொத்தம் 988 (வடக்கு ஆண்கள்-158 மற்றும் பெண்கள் – 58 மொத்தம் – 216 நபர்கள்) மற்றும் (மத்தியம் ஆண்கள்-462 மற்றும் பெண்கள் – 310 மொத்தம் – 772 நபர்கள்) பணியாளர்களுக்கு முககவசம், கையுறை, தொப்பி, மிளிரும் ஜாக்கெட், கம்பூட்ஸ், கட்சூ மற்றும் பேக் (Bag) போன்ற பாதுகாப்பு உபகரணங்களை பொது சுகாதாரத்தின் அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் அரசு கூட்டுறவு சங்கங்களிடமிருந்து வாங்கலாம்.

- தற்போது 2025- 2026-ஆம் ஆண்டு வடக்கு மற்றும் மத்திய மண்டலங்களில் பணிபுரியும் நிரந்தர பணியாளர்கள் (AMS மற்றும் UGD பணியாளர்கள் உட்பட) VOC Park-ல் பணிபுரியும் நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை கீழ்கண்டவாறு

மண்டலம்	பாலினம்	வடக்கு	மத்தியம்	மொத்தம்
மண்டலங்களில் பணிபுரியும் நிரந்தர தூய்மைப் பணியாளர்கள்	ஆண்	150	421	571
	பெண்	058	308	366
மண்டலங்களில் பணிபுரியும் நிரந்தர AMS பணியாளர்கள்	ஆண்	008	017	025
	பெண்	--	--	--
VOC PARK-ல் பணிபுரியும் நிரந்தர பணியாளர்கள்	ஆண்	--	007	007
	பெண்	--	002	002
UGD பணியாளர்கள்	ஆண்	--	017	017
	பெண்	--	--	--
	மொத்தம்	216	772	988

